தூத்துக்குடி மாநகராட்சி

கருத்துக்கேட்பு கூட்டம்

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "மிடுக்கான நகரம்"(Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களில் தூத்துக்குடி மாநகராட்சியும் இடம் பெற்றுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து, மேற்கண்ட "மிடுக்கான நகரம்"(Smart City) திட்டத்தினை செயல்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மூலம் மெசர்ஸ், மஹிந்திரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லிமிட், நிறுவனத்தினை தொழில்நுட்ப ஆலோசகராக தேர்வு செய்துள்ளது.

மேற்கண்ட திட்டத்தில் மேற்படி தொழில்நுட்ப வல்லுநர் குழு மூலம் குடிநீர் மேலாண்மை, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, நகர்ப்புற போக்குவரத்து மேலாண்மை, மின் ஆளுமை மற்றும் பொது மக்கள் சேவை முதலான திட்டங்கள் செயல்படுத்துவது குறித்து 29/09/2015 செவ்வாய் கிழமை காலை10.30 மணியளவில், மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட மாமன்ற உறுப்பினர்கள் மாநகர வளர்ச்சிக்கான தங்கள் கருத்தினை பதிவு செய்துள்ளார்கள்.